ஆனமடுவ மக்களைப் பாராட்டுவோம்!

Written by - பதிவுகள் -
Friday, 16 March 2018 13:19 - Last Updated Friday, 16 March 2018 13:23

ஆனமடுவ மக்களே! நீங்கள் வாழி!
நீங்கள் சீர் செய்தது உணவகத்தை மட்டும்
அல்ல;
இனங்களுக்கிடையிலான குரோதங்களையும்தாம்.
நீர் வாழி! உம் செயல் வாழி!
வெறிபிடித்த மானுட உணர்வுகள்
விளைவித்த அழிவினை மட்டுமா
சீர் செய்தீர்! கூடவே
மானுட நேயமென்னும் பண்பினையும்தான்
மலர்வித்தீர்!
மானுடரே! நீர் வாழி! வாழி!

அண்மையில் இலங்கையில் நடைபெற்ற முஸ்லீம் மக்களுக்கெதிரான வன்முறையின் போது ஆனமடுவப் பகுதியில் சேதத்துக்குள்ளாக்கப்பட்ட முஸ்லிம் உணவகத்தை அப்பகுதிச் சிங்கள மக்கள், பௌத்த மதகுருமார் மற்றும் வணிக நிறுவனங்கள் இணைந்து சீரமைத்துக் கொடுத்திருக்கின்றார்கள் என்னும் செய்தியினை பி.பி.சி.தமிழ் இணையத்தளத்தில் வாசித்தேன். மிகவும் வரவேற்கத்தக்க விடயம். இவ்விதம் தாங்களாகவே முன்வந்து இனவாதிகளால் சேதமாக்கப்பட்ட உணவகத்தைச் சீராக்கியதன் மூலம் அப்பகுதிச் சிங்கள மக்கள் அனைவருக்கும் முன்மாதிரியாகத் திகழ்கின்றார்கள். அவர்கள் சேதமாக்கப்பட்ட உணவகத்தை மட்டுமல்ல சீர் செய்தது, இனங்களுக்கிடையிலான குரோத உணர்வுகளையும் தாம். அச்செய்தியினை முழுமையாகக் கீழே தருகின்றேன் ஒரு பதிவுக்காக:

பி.பி.சி தமிழ் செய்தி!

1 / 3

[illegible]

இலங்கையில் சமீபத்தில் நடைபெற்ற இன மோதலில் ஆனமடுவவில் சதேப்படுத்தப்பட்ட முஸ்லிம் உணவகத்தை உள்ளூர் சிங்கள மக்கள், பௌத்த மதகுருமார் மற்றும் வணிகர் சங்கத்தினர் சீரமைத்துக் கொடுத்துள்ள சம்பவம் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் கண்டி மாவட்டத்திலும், அம்பாறையிலும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயல்கள் நடந்தபோது பெரிதும் இலக்கு வகைகப்பட்டவை முஸ்லிம்களின் வணிக நிறுவனங்கள்தான். அவற்றில் பெரு வணிக நிறுவனங்களும் மிகச் சிறிய கடைகளும் உணவு விடுதிகளும் அடக்கம். கூறிப்பாக, கண்டி மாவட்டத்தின் நிலைமை மிகவும் மோசம். முஸ்லிம்கள் அங்கு பெருத்த சேதத்தை எதிர்கொண்டிருந்தார்கள். ஆனால், இப்போது நாம் கூறப்போகும் நிகழ்வு நடந்தது பூத்தளம் மாவட்டத்தில் ஆனமடுவ என்னும் இடத்தில். இங்கும் மூதலில் நடந்தது வன்செயல்கள்தான் என்றாலும் இங்கு மனிதம் இன்னமும் உயிர்வாழ்கிறது என்று காண்பிக்கும் ஓரு நிகழ்வும் அதன் தொடர்ச்சியாக நடந்தூள்ளது. அது மட்டுமல்ல சிங்கள மக்கள் தமது மனித நயே உணர்வை பற்றி பெருமைபட்டுக்கொள்ளக்கூடிய நிகழ்வு இது என்றகூட சொல்லலாம்.

ஆனமடுவவில் இருபது ஓரயேொரு முஸ்லிம் உணவகம். அது நறேற்று அதிகாலையில் திடீரனெ இனந்தரியாத நபர்களால் தாக்கப்பட்டது. உரிமயைாளர்கள் ஓடிவந்து பார்த்தபோது எரிந்துகொண்டிருந்த உணவகத்தை உள்ளூர் சிங்கள மக்கள் அணைதுக்கொண்டிருந்தார்கள். உள்ளே இரு பாடல்கள் இருந்ததால் படெ்ரோல் குண்டுமலம் தாக்கியிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. சிறிது நரேத்தில் அங்கு வந்த உள்ளூர் சிங்கள மக்கள், பௌத்த மதகுருமார் மற்றும் வணிகர் சங்கத்தினர், 'இன்று இரவுக்குள்ளேயே கடையை மீண்டும் கட்டி வியாபாரம் ஆரம்பிக்க வணேடும்' என்று கூறியுள்ளார்கள். மாலயைே உணவகம் முழுமையாக சீரமகைகப்பட்டு, சிறு சிறு பழுதுகள் போக பூதிய உணவகமாக அது உருவடெுத்திருந்தது.
பொதுமகளும், வணிகர்களும், மதகுருமாரும் ஒன்றாகக் கூடி உணவகத்தை கட்டியிருக்கிறார்கள். எரிந்துபோன கூரயைை நீக்கிவிட்டு பூதிதாக அமதைத்து கொடுத்திருக்கிறார்கள்.

தனது தந்தை முழுமையான மகிழ்சியில் இருபதாகவும், தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்கள் கதைு சயெ்யப்பட்டுவிட்டதாகவும் கூறுகிறார் கடையின் உரிமயைாளர் நவ்பரின் மகனான ஏ.எம். அனஸ். இவர் ஓரு ஆசிரியர். உணவகத்தை சீரமதைத்து தந்த ஊர் மக்களுக்கு நன்றியுடன் இருபோம் என்றும் அனஸ் கூறுகிறார். இலங்கையில் கடந்த காலங்களில் பல வன்செயல்கள் நடந்திருக்கின்றன. தமிழர்களுக்கு எதிராகவும், முஸ்லிம்களுக்கு எதிராகவும் இப்படி நடந்திருக்கின்றன. தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கு இடையிலான மோதல்களும் நடந்திருக்கின்றன. இவற்றினால் இலங்கையின் பயெர் சர்வதசே மட்டத்தில் பின்னடைந்தும் இருக்கிறது. ஆனால், அவ்வப்போது கடே்கும் ஆனமடுவ சம்பவம் போன்றவவை கூறும்

ஆனமடுவ மக்களைப் பாராட்டுவோம் !

Written by - பதிவுகள் -
Friday, 16 March 2018 13:19 - Last Updated Friday, 16 March 2018 13:23

செய்திகள்தான் இங்கு இன்னமும் மனிதம் எஞ்சியிருக்கிறது என்பதை நிரூபிக்கின்றன.

இங்கு சாந்தியும், சமாதானமும் திரும்பும் என்பதில் நம்பிக்கை கொள்ள வைப்பவையும் இவையே என்கின்றனர் இங்கு உள்ள சகவாழ்வுக்கான சில செயற்பாட்டாளர்கள்

நன்றி: http://www.bbc.com/tamil/sri-lanka-43373677?SThisFB

3 / 3